Tamilmanam International Research Journal of Tamil Studies
Volume 1, Issue 1, October 2024

# மானிடவியல் பார்வையில் பிரெஞ்சியர் ஆட்சி புதுச்சேரியின் சமூக பண்பாட்டுச் சிக்கல்களும் மதப் பூசல்களும்

**சி. தண்டபாணி**

முனைவர் பட்ட ஆய்வாளர் மானிடவியல் துறை, புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், தொல்காப்பியர் சாலை, இலாசுப்பேட்டை புதுச்சேரி - 605008. மின்னஞ்சல்: mst.anthro.research@gmail.com கைப்பேசி எண்: 8428309394

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே உலகநாடுகள் நாகரிக வாயிலைத் தொடுவதற்கு முன்னரே கவிதை, இலக்கிய வகையில் தன்னிகரின்றி தமிழர்கள் தலைநிமிர்ந்த வரலாறு நாடறிந்த உண்மையாகும். சங்ககாலத் தமிழர்களின் பண்பாடு, அரசியல், சமூக வரலாற்றிற்கு நேரடி குறிப்புகள் எதுவும் இல்லை எனினும், அக்காலத்திய இலக்கிய படைப்புகளும், கல்வெட்டுகளும், வெளிநாட்டவரின் குறிப்புக்களும் ஆதாரங்களாக உள்ளன. இலக்கியம் காட்டும் வாழ்க்கை முறையே அக்காலத்தில் இருந்தது என முழுமையாக நம்புகிறவர்களும் உண்டு. இலக்கியப் படைப்புகள் இலட்சிய வாழ்வின் எதிர்பார்ப்புகளாக இருந்தன எனக் கருதுவாரும் உண்டு. எப்படியாயினும் சங்க காலத் தமிழர் வாழ்வு சீரும் சிறப்பும் கொண்டு சிறப்புடன் இருந்தது என்பதில் ஐயமில்லை. பண்டைத் தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்கிய புதுவையின் பண்பாட்டு வரலாறும், வாழ்வும் தமிழகத்தோடு இணைந்திருந்தன. அரிக்கமேடு அகழ்வாய்வுகளும், புதுவை பகுதிகளில் கிடைத்த கல்வெட்டுகளும் புதுவையின் இலக்கியச் சிறப்பினை, வாழ்க்கை வளத்தை, அயல்நாட்டு தொடர்பை உறுதிப்படுத்துகின்றன. பிரெஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரியில் மதம் பரப்புவதற்காக வந்த பாதிரிமார்கள் இரண்டு வகைகளாகப் பிரிந்து மதம் பரப்புவதில் அழுத்தத்தைக் காட்டி வந்தனர். அவர்களிள் ஒருவகை கப்பூச்சின் பாதிரிமார்கள் என்றும், மற்றொரு வகை சேசுசபை பாதிரிமார்கள் என்றும் இரு பெரும் பிரிவுகளாக இருந்து தங்களின் கிறிஸ்துவ மதத்தை பூர்வகுடிகளின் மத்தியில் பரப்பி வந்தனர். மற்றும் பலதரப்பட்ட சிக்கல்களையும், தடைகளையும் பூர்வகுடிகளின் இந்து மதத்திற்கும், மதம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும் கொடுத்து வந்தனர். மேலும் இந்துக்களுக்குள் வலங்கை, இடங்கை என்னும் இரு பெரும் பிரிவுகளாக மக்கள் பிளவுபட்டு, இருவேறு பெரும் துருவங்களாக சமூகத்தில் எப்பொழுதும் பலதரப்பட்ட பூசல்களில் ஈடுபட்டு வந்தனர். மற்றும் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த மக்களுக்கும் பலதரப்பட்ட சிக்கல்களும், அழுத்தங்களும் நடைபெற்றுள்ளன. இவையனைத்தையும் மானிடவியல் பார்வையில் ஒரு இனவரலாற்று (நுவாழொளைவழசiஉயட யுppசழயஉh) அடிப்படையில் இதுவரையில் யாரும் ஆய்வுகள் செய்யவில்லை என்பதால், மானிடவியல் ஆய்வாளர் என்ற முறையில் பிரன்ச்சு புதுச்சேரியின் பண்பாட்டு அசைவுகளை இந்த ஆய்வுக் கட்டுரையில் ஆராய்ந்து வழங்குகின்றேன். ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரும், புதுவை விடுதலைப் பெற்ற காலத்திற்கு முன்னரும் உள்ள இடைப்பட்ட காலத்தில், புதுவையின் பூர்வீகக்குடிகளான தமிழர்களின் பண்பாட்டு அசைவுகளையும், சமூக வளர்ச்சியின் வரலாற்றையும், சமூக பண்பாட்டு மாறுதல்களையும், முரண்பாடுகளையும் தெளிவாக வரலாற்று ஆவணங்களின் அடிப்படை உதவியுடன் இந்த ஆய்வுக்கட்டுரையில் காணலாம்.

**கலைச்சொற்கள்**: பண்பாடு, சமூக வளர்ச்சி, பிரன்ச்சியர் வரலாறு, மானிடவியல், மதச் சிக்கல்கள்.

## முன்னுரை

பிரெஞ்சு இந்தியப் பகுதியான புதுச்சேரி பல வகையான வரலாறுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. பிரெஞ்சியர் ஆட்சியின்போது புதுச்சேரியில் பலவகையான சமூக பண்பாட்டு மாறுதல்களும், முரண்பாடுகளும் நிறையவே நடந்தேறி உள்ளன. அவைகளில் மதம் சம்பந்தப்பட்ட பலவகையான சிக்கல்களும், பூசல்களும் மிகவும் குறிப்பிடும் வகையில் இங்கு நடந்துள்ளன. பிரெஞ்சியர் ஆட்சியில் புதுச்சேரியில் மதம் பரப்புவதற்காக வந்த பாதிரிமார்கள் இரண்டு வகைகளாகப் பிரிந்து மதம் பரப்புவதில் அழுத்தத்தைக் காட்டி வந்தனர். அவர்களின் ஒருவகை கப்பூச்சின் பாதிரிமார்கள் என்றும், மற்றொரு வகை சேசுசபை பாதிரிமார்கள் என்றும் இரு பெரும் பிரிவுகளாக இருந்து தங்களின் கிறிஸ்துவ மதத்தை பூர்வகுடிகளின் மத்தியில் பரப்பி வந்தனர். மற்றும் பலதரப்பட்ட சிக்கல்களையும், தடைகளையும் பூர்வகுடிகளின் இந்து மதத்திற்கும், மதம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும் கொடுத்து வந்தனர். மேலும் இந்துக்களுக்குள் வலங்கை, இடங்கை என்னும் இரு பெரும் பிரிவுகளாக மக்கள் பிளவுபட்டு, இருவேறு பெரும் துருவங்களாக சமூகத்தில் எப்பொழுதும் பலதரப்பட்ட பூசல்களில் ஈடுபட்டு வந்தனர். மேலும் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த மக்களுக்கும் பலதரப்பட்ட சிக்கல்களும், அழுத்தங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அதனால் சமூகத்தில் பல பிரச்சினைகளும், சிக்கள்களும் பூர்வகுடிகளின் வாழ்வியல் அம்சங்களை பாதித்து வந்தன. இவையனைத்தையும் மானிடவியல் பார்வையில் ஒரு இனவரலாற்று (நுவாழொளைவழசiஉயட யுppசழயஉh) அடிப்படையில் இதுவரையில் யாரும் ஆய்வுகள் செய்யவில்லை என்பதால், மானிடவியல் ஆய்வாளர் என்ற முறையில் பிரன்ச்சு புதுச்சேரியின் பண்பாட்டு அசைவுகளை இந்த ஆய்வுக் கட்டுரையில் ஆராய்ந்து வழங்குகின்றேன். இவைகளைப் பற்றி இக்கட்டுரையில் மானிடவியலாளர் பார்வையில் சமூகத்தின் பண்பாட்டு அசைவுகளையும், பிறமத அழுத்தங்களால் ஏற்பட்ட ஊடாட்டங்கள் பற்றியும் தெளிவாக ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு "மானிடவியல் பார்வையில் பிரெஞ்சியர் ஆட்சி புதுச்சேரியின் சமூக பண்பாட்டுச் சிக்கல்களும் மதப் பூசல்களும்" என்ற தலைப்பின்கீழ் ஆய்வுக்கட்டுரையாக விளக்கப்படுகிறது.

**தொகுப்புரை**

புதுச்சேரியில் கி.பி. 1674 -ஆம் ஆண்டுகளுக்கு மேல்தான் பிரெஞ்சியரின் ஆட்சி என்பது சிறிது சிறிதாக தொடங்கப்பட்டு பின்பு நன்றாக வளர்ந்து கி.பி. 1954-ஆம் ஆண்டு வரை சிறப்புற்று இருந்தது என்று கொள்ளலாம். இதற்கு இடைப்பட்ட காலத்தில் புதுச்சேரியில் சமூக வாழ்வு என்பது பலதரப்பட்ட பண்பாட்டு முரண்பாடுகள் கொண்டதாகவும், சமூக வளர்ச்சி என்பதில் மதம், இனம், படையெடுப்புக்கள் போன்றவற்றின் தாக்கத்தின் காரணமாக பலதரப்பட்ட சிக்கல்களும், பின்னடைவுகளும் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருந்தன. பின்பு அவை கொஞ்சம் கொஞ்சமாக காலப் போக்கில் மாற்றங்கள் அடைந்து பூர்வகுடிகளான தமிழ் மக்கள் தங்களின் வாழ்க்கையில் பெரும் வளர்ச்சியை கண்டனர் என்பதில் ஐயமில்லை. இந்தப் பண்பாட்டு சிக்கல்களையும் மதப் பூசல்களையும் பல வகைகளாகப் பிரிக்கலாம். அவைகளைப் பற்றி ஒவ்வொன்றாகக் கீழ்வரும் பகுதிகளில் நாம் காணலாம். கப்பூச்சின் பாதிரிமார்கள், சேசுசபை பாதிரிமார்கள், உள்ளூர் இஸ்லாமியர்கள் மற்றும் பூர்வகுடிகளான தமிழ்மக்களின் வலங்கை இடங்கை பிரச்சினைகள் அனைத்து பற்றியும் தெளிவாக கீழ்வரும் பகுதியில் நாம் ஆராயப் போகின்றோம்.

**கிறிஸ்துவ சபைகளின் முரண்பாடுகள்**

பிரெஞ்சியர் ஆட்சிக்கு முன்பே கிறிஸ்தவ சபைகள் புதுச்சேரிக்கு வந்து விட்டபடியால் அவைகள் அதிக செல்வாக்கு கொண்டிருந்தன. அவர்களில் இரு பெரும் பிரிவுகளாக பிரிந்து செயல்பட்டன. ஒன்றுக்கொன்று முரண்படும் விதத்திலும் அமைந்திருந்தன. அவர்களில் கப்புச்சின் சபை என்றும் சேசுசபை என்றும் இரண்டு மாபெரும் பிரிவுகள் இயங்கி வந்தன.

**கப்பூச்சின் சபை**

கப்பூச்சின் சபைக்கு என்று தனி பாதிரிமார்கள் இருந்தனர். பிரான்சுவா மார்த்தேன் காலத்தில் புதுவையில் மூன்று கப்பூச்சின் பாதிரிகள் இருந்தனர். ஒருவர் பெயர் நுளிசவை னுந வுழரசள இவருக்கு சொந்தமாக கடற்கரை அருகில் செயின்ட் ல ஜார்ஜ் என்ற கோயில் இருந்தது. அக்கோயில் தற்போதுள்ள நகர மன்றத்தின் தென்பகுதியில் உள்ள இடத்திலும், கசேர்ன் வீதி உள்ள இடத்திலும் அமைந்திருந்தது. இக்கோயில் தானப்ப முதலியாரால் பாதிரிமார்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டது. இக்கோயிலைச் சுற்றி ஒரு பெரிய தோட்டம் இருந்தது. இதுவன்றி கப்பூச்சின் பாதிரிகளுக்கு கம்பெனிக்கு மேற்கே மற்றொரு பெரிய தோட்டம் இருந்தது. அதிலும் சில கட்டடங்கள் இருந்தன. இவ்வளவு வசதி இருந்தும் பாதிரிகள் பண்டகசாலைக் குள்ளேயே ஒரு சிறு பகுதியில் குடியிருந்தனர். இந்த நிலையில் பாதிரியார் நுளிசவை னுந வுழரசள என்பவர் சாலைக்கு வடக்கே ஒரு இடத்தை விலைக்கு வாங்கி அதில் கட்டடம் கட்ட விரும்பினார். பிரான்சுவா மார்த்தேன்; எவ்வளவு கூறியும் கேட்காமல் ஒரு கோவிலும், மடமும் கட்ட ஆரம்பித்தனர். கட்டடம் இரண்டு அடுக்காக எழும்பி சுற்றிலும் உள்ள வீடுகளின் உட்பகுதிகளைக் காணும் அளவுக்கு உயர்ந்தது. பண்டகசாலையிலும் அதைச் சுற்றிலும் வசித்த அலுவளர்கள் புகார் கூறினர். அதனால் பிரான்சுவா மார்த்தேன் பாதிரிகளை மிகவும் கண்டித்து நிறுத்தி வைத்தார். கிறிஸ்துவ சபைகளுக்குள்ளேயே சடங்கு மற்றும் அரசாங்க செல்வாக்கு போன்ற விழயங்களில் முரண்பாடுகள் இருந்திருக்கின்றன. இதில் கப்பூச்சீன் சபை பாதிரியார்கள் சற்றே அரசாங்க செல்வாகை குறையப்பெற்றவர்களாகத் தெரிகிறது. இதனால் இவர்கள் கோட்டைக்குள் இருக்கும் கிறிஸ்துவ கோயிலைப் படைக்கும் அதிகாரம் மட்டும் பெற்றிருந்தனர்.

**சேசு சபை**

சேசு சபை பாதிரிகள் இந்து சன்னியாசிகள் போலவே தவ வாழ்க்கை மேற்கொண்டனர். உயர் ஜாதி வகுப்பினருக்கு மட்டும் லத்தின் மொழி, தத்துவஞானம், கடவுட் கொள்கை இவற்றை போதித்தனர். சேசு சபை பாதிரிகளுக்கு புதுவை ஒரு மத்திய மதப் பிரச்சார நிலையமாக மட்டுமில்லாமல் சியாம், ஜப்பான் முதலிய தூரக் கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் வழியில் தங்கிச் செல்லும் இடமாகவும், இந்தியாவில் உள்நாட்டு மதப் பிரச்சாரம் செய்யும் பாதிரிகளுக்கு தங்கி இளைப்பாறும் இடமாகவும் இருந்தது. வேதபுரீஸ்வரர் கோயிலுக்கு அருகில் தமது தேவாலயத்தைக் கட்டிய சேசு சபை பாதிரிகளுக்கு, இந்துக்கோயில் திருவிழாக்கள் மன உளைச்சலை எழுப்பின. அதனால் அவர்கள் அரியாங்குப்பம் கிராமத்தை தங்கள் மானியம் ஆக்கிக் கொண்டனர். ஊரின் வடக்கே பட்டினப் பகுதி விரிவடைவது எளிதாக இல்லை. சேசு சபை பாதிரியார்கள் தங்கள் குடியிருப்பையும், பிற கட்டிடங்களையும் விரிவடையச் செய்வதற்கு அப்பகுதியில் இருந்த ஈஸ்வரன் கோயிலும், மணக்குள விநாயகர் கோயிலும் இடையூறாக இருந்தது.1

மொழித் திறனும் ராஜதந்திரமும் நிறைந்த துய்ப்ளேக்ஸ்சின் மனைவி வின்சான் ழென்னி ஆல்பார்ட் சேசு சபை பாதிரிமார்களின் போதனைகளால் பல அவப்பெயர்களைத் தேடித் தந்தாள். ஆரம்ப காலத்தில் தமிழர் தலைவரான ஆனந்தரங்கப் பிள்ளையின் ஆலோசனைகளைச் செவிமடுத்து வெற்றிகளை குவித்த துய்ப்ளக்ஸ், தென்னிந்தியாவின் கிங் மேக்கர் என்று புகழப்பட்டு ஆங்கிலேயர்களுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கினார். சேசு சபை பாதிரிமார்களின் தூண்டுதலினால் ஆனந்தரங்கப்பிள்ளை அவர்களை கலந்தாலோசிக்காமல் அவரது மனைவி காட்டிய வழியிலேயே நடந்ததால் நாட்டில் மத கலவரங்களை சந்திக்க நேர்ந்து மற்றெல்லா ஆட்சியாளர்களையும்விட மிக்க அவப்பெயரை தேடிக்கொள்ள நேர்ந்தது.

வேதபுரீஸ்வரர் ஆலயத்தின் அருகே சேசு சபை பாதிரியார்களால் கட்டப்பட்ட செயின்ட் பால் ஆலயம் ஒன்று இருந்தது. சேசு சபை பாதிரியார்கள் புதுவையில் உயர் ஜாதி வகுப்பினருக்கு மட்டும் லத்தின் மொழி, தத்துவஞானம், கடவுட் கொள்கை பற்றி போதித்து வந்தனர். இதனால் புதுவையில் உள்ள தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள் பொதுவாக தமிழர்கள் மிக்க மன வருத்தம் அடைந்தனர். இதுமட்டுமின்றி கிறிஸ்தவ தேவாலயங்களில் ஜாதி மத பேதம் இல்லை என்று கூறி கிறிஸ்தவ மதமாற்றம் செய்யப்பட்ட உள்ளூர் தமிழர்கள் கிறிஸ்தவ கோயில்களில் அமர்கின்ற இடங்களில் உயர் ஜாதிக்காரர்களுக்குத் தனி இடம் என்றும் கீழ் ஜாதிக்காரர்களுக்குத் தனி இடம் என்றும், அந்த தனி இடத்தைப் பிரிப்பதற்கு ஒரு சிறிய மதில் சுவரையும் கட்டி அமைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். இதனால் மதமாற்றம் செய்யப்பட்ட கீழ் ஜாதித் தமிழர்கள் மிகுந்த மனவேதனைக்கு ஆலாயினர். இவர்களின் வருத்தத்தைத் தீர்ப்பதற்காக காரைக்காலில் இருந்து வந்த பாதிரியார் தமிழர்களுக்கும், வெள்ளையர்களுக்கும் தனித்தனி மதில் கட்டி பூஜை கேட்ட ஏற்பாட்டை மாற்றி, அனைவருக்கும் ஒன்றாக பூஜை கேட்க ஏற்பாடு செய்தார்.

**மதாம் துய்ப்ளேக்ஸ்சின் அதிகார மீறல்கள்;**

தமிழர்கள் தங்கள் மத ஆசாரங்களைத் துறந்து கிறிஸ்தவர்களாக வேண்டுமென்ற எண்ணத்தினால் பிராமணர்கள், கோமுட்டிகள், வெள்ளாளர்கள் வீடுகளில் எல்லாம் ஆதிதிராவிடர்களைப் பலவந்தமாகக் குடியேற்றினார:; மறுத்துவர்களுக்கு நடுவீதியில் சவுக்கடியும், காதருக்கும் நிகழ்ச்சிகளும் நடந்தன. இதன் உச்சகட்ட நடவடிக்கையாக கடுமையான பாதாள சிறைவாசமும் அளிக்கப்பட்டது. காப்பிரிகள், சிப்பாய்கள் எல்லாம் துய்ப்ளேக்ஸ்சின் மனைவி; ஒப்புதலோடு கொள்ளையிட்டனர். பாதிக்கப்பட்டவர்களை வேவுக்காரர்கள் என்று குற்றம்சாட்டினர். புpராமணர;; வெள்ளாளர், கோமுட்டி செட்டிகள் இப்படிப்பட்டவர்கள் வீடுகளில் குடியிருந்து அவர்கள் வீட்டுப் பெண்களை கெடுக்கவும் செய்தனர்.2 நாட்டைக் காக்க வேண்டிய அரசனே இவ்விதம் கொடுமைகள் புரியும் போது யாரிடம் போய் முறையிடுவது என்று பொதுமக்கள் மனம் கலங்கினர்.

**கப்பூச்சின் சபை - சேசு சபை பாதிரியார்களின் மோதல்கள்**

அக்காலத்தில் கப்பூச்சின் பாதிரிமார்களுக்கும், சேசு சபை அடியார் பாதிரிமார்களுக்கும் அரசு ஆதரவைப் பெற போட்டி ஏற்பட்டது. இதை பிரான்சுவா மார்த்தேன்; தீர்த்து வைத்தார். கோட்டை கோயில் பூஜைக்கு கப்பூச்சின் பாதிரிமார்களும், நகரத்தில் இருந்த மற்ற கோவில்களை சேசு சபை பாதிரிமார்களின் அடியார்களிடமும் ஒப்படைத்தார். ஆயினும் பூசல்கள் தொடர்ந்தது. இருவரின் பூசலைத் தீர்க்க

போப்பாண்டவர் கர்தினால் துர்னோம் ஆன் 'பத்ரியார்ழ் தாந்தியோழ்' என்பவரை புதுவைக்கு அனுப்பி வைத்தார். கர்தினால் விசாரணை செய்து சேசு அடியார் சபையினருக்கே நியாயம் வழங்கினார். 'பத்ரியார்ழ் தாந்தியோழ்' ஊருக்கு சென்ற பின் கோவா மேற்றிராணியார் - தீர்ப்பு சரியில்லை என்று கூறி கலகம் விளைவித்தார்.

**முதல் இந்துக் கலவரம்**

பிரன்ச்சிக்காரர்கள் வருவதற்கு முன்பே புதுவை நகர் பகுதியில் மூன்று இந்துக் கோயில்களும் (வேதபுரீஸ்வரர் ஆலயம், மணக்குள விநாயகர் ஆலயம், கோமுட்டி செட்டியார் கன்னிகாபரமேஸ்வரி ஆலயம், வரதராஜ பெருமாள் கோயில்கள்) இருந்தன என்றும், அவர்கள் வருகைக்குப்பின் மூன்று மாத கோயில்களும் இரண்டு மசூதிகளும் இருந்தன என்று கூறுகின்றனர். தங்களின் மத ஆதிக்கம், புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு தடையாயிருக்கும் இந்துக் கோயில்களை இடிக்குமாறு பிரான்சுவா மார்தேனிடம் பாதிரியார்கள் ஆலோசனை கூறினர்கள். தமிழர்களின் மத உணர்ச்சியை மதிக்காத சேசு சபைப் பாதிரிமார்களையும், கப்பூச்சின் சபை பாதிரிமார்களையும் மகிழ்விக்கத் திருவிழாக் காலங்களிலும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் தமிழர்களும், முஸ்லிம்களும் எந்த மத உற்சவமும் நடத்தக்கூடாது என்று பிரான்சுவா மார்த்தேன் ஆணையிட்டார்.; அதேசமயத்தில் சேசு சபைப் பாதிரிமார்கள், நடுத்தெருவில் கவர்னர் முன்னிலையில் இந்துக் கடவுளார் வடிவங்களை உடைத்துப் போடவேண்டும் என்றும், தமிழர்கள் கோயில்களை அழிக்க வேண்டும் என்றும் கூறினார்கள். ஓராண்டு காலத்திற்கும் மேலாக இத்தகையப் பேச்சுகளைக் கேட்டு பொருத்திருந்த தமிழர்கள் பொங்கி எழுந்தனர். எல்லா இனத்தவரும் ஒன்று சேர்ந்தனர். தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவில்லை. கடைகள் மூடப்பட்டன, எவ்வித வர்த்தகமும் நடைபெறவில்லை. சுமார் 15,000 நெசவுத் தொழிலாளர்கள் தங்கள் தறிகளைத் தோளில் சுமந்துகொண்டு நகரைவிட்டு போய்விடுவதற்குச் சென்னை வாயிலை நோக்கி நடந்தனர்.

நடந்த நிகழ்ச்சிகளை கேள்விப்பட்ட பிரான்சுவா மர்த்தேன,; சென்னை வாயிற்கதவுகளைச் சாத்த சொன்னார். சேசு சபை, கப்பூச்சின் சபை பாதிரிமார்கள் திகிலடைந்தனர். இனத் தலைவர்கள் எல்லோரையும் கோட்டைக்கு வருமாறு அழைத்தார். ஆனால் அவர்கள் மறுத்து விட்டனர். பிரான்சுவா மார்த்தேன்; சில ராணுவத்தினருடன் குதிரையில் தொழிலாளர்கள் தங்கியிருந்த வாயிலை நோக்கிச் சென்றார். மக்கள் நேரமாக நேரமாக அதிகமாகக் கூடினர் குதிரைமீது இருந்தவாரே மெதுவாக சென்னை வாயில் வரையில் சென்ற பிரான்சுவா மார்த்தேன், தோழிலாளர்களைப் பார்த்து எல்லோரையும் வேலைக்குப் போகும்படியும், மாலையில் வந்து தம்மைக் காணுமாறும் கூறி, ஏதோ உலாவப்போவது போல் போக்கு காட்டித் தன் பரிவாரத்துடன் வழுதாவூர் வழியாகத் தன் மாளிகையை அடைந்தார். மாலையில் விவாதம் நடந்தது முடிவில் தமிழர்கள் தங்கள் கடவுளாரின் படிமங்களை எடுத்துக்கொண்டு வீதி முறை பிரதட்சணம் செய்யலாம் என்று முடிவாயிற்று. கோயில்களை மூடவேண்டும் என்ற கேள்வியே எழவில்லை. ஆயினும் தமிழர்கள் கோட்டைக்கு தொலைவில் நகரப்பகுதியில் பிரதட்சணம் நடத்தவேண்டும் என்று கூறப்பட்டது. கி.பி. 1706 இல் நெசவாளர்கள் தாங்கள் கொண்டாடிவந்த விழாக்களை நடத்தக்கூடாது என்று கவர்னர் ஆணையிட்டதை நீக்கி பழையபடியே கொண்டாட உத்தரவளிக்க வேண்டுமென்று மன்னர் ஆலோசனை சபையைக் கேட்டுக்கொண்டனர். இந்நெசவுத் தொழிலாளர்கள் கப்பலில் ஏற்றுமதி செய்யும் துணிகளைத் தயாரிப்பவர்களாதலாலும், அவர்கள் வேற்று ஊருக்குச் சென்றுவிட்டால் வியாபாரம் செய்ய இயலாது

என்பதாலும், சுவாமிகள் ஊர்வலம் செய்யலாமென்று இசைவு தரப்பட்டது. மறுநாளே நெசவாளர்கள் ஒரு குளத்தில் மனற்குளத்து பிள்ளையாரை மஞ்சள் நீராடினர். இதைக் கண்டு கோபம் அடைந்த சேசு சபை கூட்டத்தினர், மணக்குள விநாயகர் கோவிலுக்குச் சில ஆதி திராவிடப் பணியாளர்களும், கிருத்துவர்களும் சூழச் சென்று, நந்தா விளக்குகளை வீழ்த்தி;; விக்கிரகங்களில் இருந்த பட்டுத் துணிகளைக் கிழித்து எறிந்தனர். இரவு முழுவதும் தொண்டர்கள் கோயிலிலிருந்து பாதுகாத்தனர். நிகழ்ச்சிகளை கேள்விப்பட்ட பிரான்சுவா மார்தேன் விசாரணைக்குழு ஒன்றை அமைத்தார். அதில் ஃளாங்கூர், தெஸ்ப்ரேஸ், தெலாப்ரே வொஸ் தி யேர் ஆகியோர் இடம் பெற்றனர். ஆயினும் கடைகள் மூடப்பட்டன. கோட்டையில் வேலை செய்த தொழிலாளர்கள்கூட வேலைக்குப் போகவில்லை. பிரான்சுவா மார்தேன் அவர்களிருப்பிடம் தேடிச் சென்று அவர்களது குறையைக் கேட்டார். அவர்கள், டச்சுக்காரர்கள் காலத்தில் இருந்த மதச் சுதந்திரம் இப்பொழுதும் வேண்டும் என்று தெரிவித்தனர். இதற்கு பிரான்சுவா மார்தேன்; உடனடியாக ஏதும் பதில் அளிக்காததால், அவர்கள் புதுச்சேரியை விட்டு புறப்படத் தொடங்கினார்கள். நிலைமை மிகவும் மோசமாவதைக் கண்ட பிரான்சுவா மார்தேன் வாயில் கதவுகளை மூடிவிட்டு பலமாகக் காவல் செய்யுமாறு கட்டளையிட்டார். அடுத்த நாளே பிரான்சுவா மார்தேன் தம் ஆலோசனை சபையைக் கூட்டினார். குருமார்களும், அந்நிய நாட்டு போதகர்களும் தமிழர்களின் விருப்பத்தை ஏற்றுக் கொண்டனர். ஆனால் சேசு சபை பாதிரிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் தமிழர்கள் வெள்ளிதோறும் பெரிய கோயிலுக்கு (1748-ல் இடிக்கப்பட்ட வேதபுரீஸ்வரர் கோயில்) மேளவாத்தியம், கொம்பு, தமுக்கு, நடனமாதர்கள் இன்றி ஆராதனை நடைபெறலாம் என்றும்;;; நெசவாளர் தெருவில் இருக்கும் கோவிலுக்கும், பெரியகடை கோவிலுக்கும் போய் வணங்கலாம் என்றும் வழக்கம்போல விழாக்கள் கொண்டாடலாம் என்றும் இசைவு தரப்பட்டது.3 சேசு சபை பாதிரிமார்களின் முயற்சியால் இக்கோயில் இடிக்கப்பட்டு பின்னர் சிறிய கோயிலாகக் கட்டப்பட்டதை பிரான்சுவா மார்தேன் தனது நினைவுக் குறிப்புகளில் கூறியிருக்கின்றார்.4

**இரண்டாம் இந்துக் கலவரம்**

கியோம் ஆந்த்ரே எபேர் பதவி ஏற்றதும் தாம் ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியாக மக்களிடம் பெயர் வாங்க வேண்டும் என நினைத்து, புதுவையில் இருந்த எல்லா மக்களுக்கும் அவரவர் பழக்க வழக்கப்படி வாழ உரிமை உண்டு என்று அறிவித்தார். இதனை சேசு சபை பாதிரியார்கள் கடுமையாக எதிர்த்தனர். இதன் விளைவாக எபேரை பிரஞ்சு மன்னர் திரும்பவும் அழைத்துக் கொண்டார். இரண்டாவது முறையாகப் பொறுப்பேற்ற துய்லிவியே, சேசு சபை பாதிரிமார்களின் விருப்பப்படி இந்துக்களின் திருவிழாக்களையும், ஞாயிற்றுக்கிழமை கொண்டாடும் விழாக்களையும் தடை செய்தார். இதனால் மறுபடியும் போராட்டம் வெடித்தது. சேசு சபை பாதிரிமார்களின் மனத்திருப்திக்காக இந்துக்களின் மதச் சுதந்திரத்தைப் பறித்த துய்லிவியேவை எதிர்த்து இந்துக்கள் கோஷமிட்டனர். கடைகள் மூடப்பட்டன, துறைமுகம் செயலற்றது, வியாபாரம் செயலிழந்தது. வேறு வழியில்லாத நிலையில் இவ்வாணையைத் திரும்பப் பெற்றார் கவனர். ஆணையைத் திரும்பப் பெற்றதில் துய்லிவியே மீது சேசு சபையினர் அதிருப்தியடைந்தனர். இந்நிலையைப் பயன்படுத்தி கியோம் ஆந்த்ரே எபேர,; சேசு சபைப் பாதிரிமார்களுக்கு உதவுவதாக வாக்களித்து அவர்களின் பரிந்துரையின் பேரில் மீண்டும் கவர்னர் ஆனார்.

**பெரிய இந்து மதக் கலவரம்**

புதுவையில் வடதிசையில் ஐரோப்பியர் வசிக்கும் பகுதி விரிவடைவது எளிதாக இல்லை. ஏனெனில் சேசு சபை பாதிரிமார்கள் தங்கள் குடியிருப்பை கட்டிடங்களையும் விரிவடையச் செய்வதற்கு அப்பகுதியில் இருந்த வேதபுரீஸ்வரர் கோயில் இடையூறாக இருந்தது. மற்றும் அங்கு இந்துக்கள் கோயிலோடு நெசவாளர் துணி நெய்யும் சாமான்களும், இருபுறங்களிலும் மரங்கள் அமைந்த சாலைகளும், மரங்களின் நிழலில் நெசவாளர்களின் பாவுகளுக்கு சாயம் தோய்த்து காயவைக்கும் வேலைகளும் நடந்து வந்ததால் விரிவுப்பணி நடக்க முடியாமல் போயிற்று. மற்றும் சேசு சபை பாதிரியார்களின் கோயிலுக்கு அருகில் சிவன் கோயில் இருப்பதும் அக்கோயிலில் திருவிழாக்கள் கொண்டாடுவதும் சேசு சபை பாதிரிமார்களுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆயினும் தங்கள் மத வளர்ச்சிக்குப் பெரும் இடையூறாக இந்த சிவன் கோயில் இருப்பதாகவும் இதனை எப்படியும் அழித்துவிட வேண்டும் என்றும் மதாம் துய்ப்பிளேக்சிடம் கோரிக்கை வைத்தனர். தான் இதுகுறித்து முயற்சி எடுப்பதாக கூறிய மதாம் துய்ப்பிளேக்ஸ் - முள்ளை முள்ளால் எடுக்கும் ராஜதந்திர நடவடிக்கையால் கவர்னரின் துபா~hக இருக்கின்ற ஆனந்தரங்கம்பிள்ளை அவர்களை கிறிஸ்தவராகும்படியும் இல்லாவிட்டால் அவரது துபா~; பதவி பறிக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தனர். ஆனால் இதனால் அச்சமடையாத ஆனந்தரங்கப்பிள்ளை தன் பதவியை இழக்க நேரிட்டாலும் தான் மதம் மாற முடியாது என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டார். இதுகுறித்து மதாம் கவர்னர் துய்ப்பிளேக்சிடம் புகார் கூறினார். ஆனால் துய்ப்பிளேக்ஸ் இந்தப் புகார் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மௌனமாக இருந்து விட்டார். கவர்னரின் இந்தச் செயல் மதாம் துய்ப்பிளேக்சுக்கு ஏமாற்றம் அளித்தாலும் தன் முயற்சியைத் தளபதி பராதியுடன் தொடர்ந்தார். 16- 03-1746 -ஆம் ஆண்டு புதன் இரவு 11 மணியளவில் சர்ச்சைக்குரிய வேதபுரீஸ்வரர் கோயிலிலே யாரோ இரண்டு பேர் கல்பாசியிலே நரகலைக் கரைத்து வந்து பலிபீடம் சுற்றிலே இருக்கின்ற சூரியன், சந்திரன், பைரவர் ஆகிய தெய்வங்களின் மேல் தெளித்து, மூலவர் சன்னதி சாளரத்தின் வழியாக உள்ளேயும் இறைத்து, பாத்திரத்தை நந்தியின் பேரிலே உடைத்துப் போட்டுவிட்டுக் கோயிலில் இடிந்து இருக்கிற வழியாகப் புறப்பட்டுப் போனார்கள். மறுநாள் 17-03-1746 -ஆம் ஆண்டு காலை கோவில் தொழிலாளிகளும், அர்ச்சகர்களும் பெரிய வாசல் கதவைத் திறந்து உள்ளே சென்று இத்தகைய அசுத்தச் செயல்களைக் கண்டு வெளியே வந்து பெரிய மனிதர்களையும் தர்மகர்த்தாக்;களையும் அழைத்து வந்து காண்பித்தனர். நான்கு அர்ச்சகர்கள் எல்லா வீதிகளிலும் வீட்டுக்கு வீடு ஈஸ்வரனுக்கு பூஜை இல்லை யாரும் அடுப்பு மூட்டி சமையல் செய்ய வேண்டாம் என்று கோரிக்கை வைத்தனர். எல்லா இனத்தவரும் தங்கள் வேற்றுமைகளை மறந்து காலை 9 மணி அளவில் பெருமாள் கோயில் வாசலிலே கூடித் தங்கள் அதிருப்தியை அரசுக்கு உணர்த்த உறுதி பூண்டனர். நகரின் எல்லா கடைகளும் மூடப்பட்டன. புதுவையின் அன்னிய வர்த்தகம் ஸ்தம்பித்தது. இந்த செய்தியை அறிந்த துய்ப்பிளேக்ஸ் கிரிமோசி பண்டிதரை அனுப்பிக் கூட்டம் கூடுபவர்களையெல்லாம் அடித்து விரட்டச் சொன்னார். கவர்னர் கட்டளையை நிறைவேற்றப் புறப்பட்ட கிரிமோசி பண்டிதர் மாநாட்டார் கூடியிருக்கின்ற பெருமாள் கோயிலுக்குச் சென்று ஒரு செட்டியை கன்னத்திலே அடித்து எல்லோரையும் ஓடிப்போகச் சொல்லி மறுபடியும் அடிக்க வந்தார். ஆனால் நிலைமை அவருக்கு சாதகமாக இல்லை. எங்கள் கோயிலிலே இப்படி அநியாயம் நிகழ்ந்து இருப்பதற்கு விசாரிக்க நாங்கள் கூடினால், நீர் எப்படி விரட்டலாம் என்று கோபமாக மாநாட்டார் கேட்டு அடிக்க வந்த அவரைக் கோபமாகத் தள்ளிவிட்டனர். இதனால் ஆத்திரமடைந்த கிரிமோசி பண்டிதர் கவர்னரிடம் முறையிட்டார். கவர்னரும் மாநாட்டார்களை அழைத்து, கிரிமோசி பண்டிதரை அடித்ததற்காக உங்களை சுட்டு போடுவேன்; ஆனாலும் மன்னிக்கிறேன். உங்கள் குறைகளை ஆனந்தரங்கப்பிள்ளையிடம் கூறிக் கலைந்து செல்லுங்கள். அவர்

தீர்த்து வைப்பார் என்று கூறி அனுப்பினார்.5 ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

**வலங்கை இடங்கை பூசல்கள்**

இந்து மதத்தின் வலங்கை இடங்கை பிரிவுகளில் பூசல்கள் உச்ச நிலையில் இருந்தன. புதுவை வேதபுரீஸ்வரர் ஆலயத்தில் வலங்கை பிரிவினருக்கு அதிகச் சிறப்பு அளிக்கப்பட்டதால் இடங்கைப் பிரிவினர் கி.பி. 1715 -இல் வேதபுரீஸ்வரர் ஆலயத்திற்கு இடதுபுறமாக காளத்தீஷ்வரர் ஆலயம் என்னும் ஈஸ்வரன் கோவிலை நிறுவினார்கள். ஆயினும் கலகங்கள் தொடர்ந்தன. சோழர் காலந்தொட்டு நடைபெற்று வந்த வலங்கை இடங்கைக் குலங்களின் பூசல்கள் துய்ப்பிளேக்ஸ் காலத்தில் சற்று அதிகமாகவே காணப்பட்டது எனலாம். வலங்கையார் கூட்டமாக வந்து இடங்கைக் குலத்தவன் மேல் வழக்குத் தொடர்ந்ததை ஆனந்தரங்கப்பிள்ளை தம் நாட்குறிப்பில் குறிப்பிடுகின்றார். கும்பினி வர்த்தகரிலே கூடலூர் குமரப்ப செட்டி பேரன் பூத்து உலகப்ப செட்டி என்பவன் புதுப்பேட்டைத் திருவிழாவுக்குப் போகும்போது வெள்ளைக் குதிரையில் ஏறிப் போனான். மறுபடியும் திரும்பிவரும்போதும் சிறிது தூரம் தான் ஏறிவந்தும், பிறகு தன் மகனை ஏற்றிக் கொண்டும் வந்தான். இப்படி வலங்கையருக்கு உரித்தான வெள்ளை குதிரை, வெள்ளைக் குடை, வெள்ளை பாவாடை முதலியவற்றை உபயோகப்படுத்தி வெள்ளை பிருதுகளுடனே சார்ந்தமையால் இடங்கையனான இவன் எங்களுக்கு மனவருத்தமாக உள்ளது. இடங்கையனான இவன், வலங்கையர் மாதிரி நடந்தது குற்றம், எனவே தக்க தண்டனையை இவனுக்கு வழங்குமாறு வலங்கையர் கோரிக்கை வைத்தனர். பூத்து உலகம்பட்டி காவலில் வைக்கப்பட்டான். இந்து மதக் கோயில்களின் திருவிழாக்களின்போது கடவுளரின் வடிவங்களுடன் ஊர்வலமாக செல்வது வழக்கமாக இருந்து வந்துள்ளது. இவ்வாறு ஊர்வலமாகச் செல்லும் பொழுது வலங்கை இனத்தாருக்கு என்று தனியாக ஊர்வலமும், இடங்கை இனத்தாருக்கு என்று தனியாக ஊர்வலமாக பிரிக்கப்பட்டு நடந்தேறியுள்ளது. இதில் யாரேனும் கட்டுப்பாடுகளை மீறி மற்றவர் இடத்தில் கடவுளின் ஊர்வலத்தை கொண்டு செல்லும் பொழுது கலவரங்கள் பலவாறு நடந்தேறி உள்ளன. இவற்றை வரலாற்று ஆவணங்கள் அடிப்படையில் தெளிவாக நாம் ஆய்வில் காணமுடிகிறது.

**இஸ்லாமியர் கலகம்**

வேதபுரீஸ்வரர் ஆலயத்தை இடித்துக் கொண்டிருக்கும்போதே கப்பூச்சின் சர்ச்சுக்கு (இந்த சர்ச் இன்றும் உள்ளது) வலப்புறத்தில் உள்ள பள்ளி வாசலையும் (இந்தப் பள்ளிவாசல் இன்றில்லை) இடிக்க கட்டளையிட்டார் கவர்னர் துய்ப்பிளேக்ஸ். பள்ளிவாசலை கொஞ்சம் இடித்தவுடனேயே சோனகர்கள் போய் ஜமேதார் அப்துல் ரகுமானிடம் முறையிட்டனர். அவரும் உடனே துய்ப்பிளேக்ஸ் இடம் சென்று ஐயா நீங்கள் பள்ளிவாசலை இடித்து விட கட்டளையிட்டு இருக்கிறீர்கள், அப்படி அது இடிக்கப்பட்டால், ஒரு சிப்பாய் கூட இங்கிருக்கப் போவதில்லை. மேலும் இடிக்க ஆரம்பித்தவுடனே சிப்பாய்கள் இடிப்பவர்கள் மீது பாய்ந்து அவர்களைக் கொன்று விடுவார்கள் என்றார். அப்போது அதிகமான முஸ்லிம்கள் உள்நாட்டுச் சிப்பாய்களாக இருந்ததால் மேலும் ஒரு பிரச்சனையை உருவாக்கப்பயந்த கவர்னர் பள்ளிவாசலை இடிப்பதைப் பற்றி பேச்சே இல்லை என்று தமது உத்தரவை வாபஸ் பெற்றார்.

**சடங்குகள்-நம்பிக்கைகள்-வழக்காறுகளின் பரவல்கள்**

வெள்ளைக்காரரைத் தீண்டத் தகாதவராக எண்ணினர் தமிழர். துறையூர் பாளையக்காரரான ரெட்டி தன் வீட்டிலிருந்து மரியோன் வெளியேறியவுடன், வீட்டைச் சாணியிட்டு மொழுகிச் சுத்தி செய்தார். இதைக்கேள்விப்பட்டதும் லெரி வெகுண்டு துறையூருக்கே திரும்பிப் போகுமாறு மரியோனுக்கு எழுதினார் (10:167). நம் ஆனந்தரங்கப்பிள்ளையும், ஐரோப்பியரும் கூட உணவுக்குப் பின் வெற்றிலை போட்டுக் கொண்டனர்.(4:164: 9:274). ஆளுநர், கவுன்சிலர் முதலான பெரிய மனிதர்களுக்கு விசேஷ நாளன்று எலுமிச்சை, மாதுளை, பூச்செண்டு கொடுத்து வாழ்த்தும் மரபும் வந்துவிட்டது (5:64: 10:116). விளக்கை அனைத்தும், சிலுவை அல்லது குரானை வைத்தும் சத்தியம் செய்தனர். ஐரோப்பியர் கூட இவ்விந்திய வழக்கத்தை ஏற்றுக் கொண்டனர.(1:390: 12:55).; நிசாமுக்கும்; மராட்டியருக்கும் சமாதானம் ஏற்பட்ட போது முஸ்லிம்கள் குரானின் மீதும், மராட்டியர் குங்குமம் அரசி மீதும் ஐரோப்பியர் விவிலியம்; மீதும் பிராமணம் செய்தனர்(10:194). படை முகாமுக்குப் பணம் அனுப்புங்கால், 500 வராகனை ஒவ்வொரு பையிலும் இட்டு, மனிதர்களின் இடுப்பில் கட்டி அனுப்பினர.; உடன் ஆயுதத்துடன் சேவகனும் சென்றான் (9:30). அம்மை, காய்ச்சல், பேதி போன்ற பல தொற்று நோய்கள் பரவியிருந்ததை இந்த ஆய்வில் நாம் காணமுடிகிறது. முகமதலிகானின் இரண்டு பையன்களும், பெண்ணும், சில வெள்ளைக்காரர்களும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அம்மைக்கு பலியாகினர். வீட்டில் வேப்பிலை மாரியம்மனுக்கு படைத்தும் எருமை ஆடு பலியிட்டும் மக்கள் பரிகாரம் தேடினார்கள். மாரியம்மனே மனித வடிவில் பல இடங்களில் உலாவுவதாகவும், உயிர்பலி, இறைச்சி, அரிசி, கள் கேட்பதாகவும் வதந்தி பரவியது. ஆனந்தரங்கப்பிள்ளைக்கு இதுபற்றி கடிதம் ஒன்று வந்தபோது அவர் நக்கல் செய்து பதில் எழுதினார். அண்ணாசாமிக்கும் அம்மை கண்டு முகத்தில் தழும்புகள் விழுந்தன. மாரியம்மன் நடமாட்டம் காரணமாக அமுல்;தார்கள் தீர்வை வசூலித்து அனுப்புதலும் தாமதமாயிற்று. பிரென்சு ஆளுநர் கிறிஸ்தவ சேவைகரையும் வெள்ளை இராணுவத்தினர் சிலரையும் விழுப்புரம் போன்ற ஊர்களுக்கு அனுப்பி, மாரியம்மனாக நடித்தோரைப் பிடித்து அடித்து ஓடச்செய்தார். அவர்களில் சிலர் கிறிஸ்தவராகவும் ஆக்கப்பட்டனர் (10:279-304). சகுனங்களில் மக்களுக்குப் பெரும் நம்பிக்கை இருந்தது. இதனை ஆனந்தரங்கப்பிள்ளை தெளிவாக விளக்குகிறார். முத்தியா முதலியார் காரைக்காலுக்குச் சென்றவர் அரியாங்குப்பம் வரை போய் சகுனத்தடை என்று திரும்பி விட்டார். பிள்ளையின் கிராமத்துக் குத்தகை வசூல் செய்யச் சென்ற இவரது மாத சம்பளம் 2 1៓2 வராகன். (த1:185-86). ஒரு ஒப்பந்தம் செய்வதற்கு சதுர்த்தி நல்லதல்ல என்றும், பஞ்சமி நல்லது என்றும் கருதினர் (2:216) வில்லியனூர் பர்கானா கணக்கர்கள், முஸ்லிம்கள் இடித்துவிட்டு வில்லியனூர் ஆலயத்தைச் சீர்செய்ய வேண்டும் என்று துய்ப்ளேக்ஸிடம் அனுமதி கேட்டனர். அவரும் தாம்பூலம் கொடுத்து அனுமதி தந்தார். அப்போழுதும் அதன் முன் மும்முறை மதாமுடன் இது பற்றி பேசியபோதும் பல்லி செல்லியதால், அவர்கள் எப்படியாகுமோ என்று கலக்க முற்றனர்.(6:151).7

**முடிவுரை**

பிரெஞ்சியர் ஆட்சியில் இருந்த புதுச்சேரியின் பூர்வீக குடிகளான தமிழ் மக்கள் தங்களின் பண்பாட்டு அசைவுகளாக பலவகையான மொழி சார்ந்த, இனம் சார்ந்த, மதம் சார்ந்த வி˜யங்களை தங்களின் பூர்வீக பண்பாட்டு அடையாளங்களாகக் கொண்டு உள்ளனர். பண்டைய காலங்கள் தொட்டு இவர்கள் மத்தியில் ஜாதி மத ஏற்றத்தாழ்வுகள் வேரூன்றி வளர்ந்து வந்திருக்கின்றன. ஆகையால் இவைகளில் திடீரென்று ஏற்படும் மாற்றத்தை இவர்களால் ஏற்றுக் கொள்வதில் பலவகையான முரண்பாடுகள்

ஏற்பட்டு சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் கொண்ட மாற்றங்களை நிகழ்த்துகின்றன. ஜாதிப் பாகுபாடுகளில் சிக்கித்தவித்த உள்ளூர் பூர்வ குடிகளில் பலர் தங்களின் தாழ்த்தப்பட்ட நிலைகளிலிருந்து மேம்பாடு அடைய எவ்விதமான வழி கிடைத்தாலும் அதை பின்பற்றுவதற்காக ஏங்கி தவித்து வந்த நிலையும் இருந்துவந்துள்ளது. வியாபாரத்திற்காக புதுவைக்கு வந்த ஐரோப்பியர்கள் இதனை சரியாக புரிந்து கொண்டு அவர்களுடைய கிறிஸ்தவ மதத்தை இங்கு பரப்புவதற்கு பலவகையான யுக்திகளையும் கையாண்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் முதற்கொண்டு உயர்ந்த ஜாதி மக்கள் வரை அனைவரிடமும் எல்லா வகையான சலுகைகளையும் வழங்குவதாகக் கூறி, முக்கியமாக ஜாதி மத ஏற்றத்தாழ்வு இல்லாமல் அனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள் என்று பொய் வாக்குக் கொடுக்கப்பட்டு, கிருத்துவ மதத்திற்கு மாற்றிய பின்பு அவர்கள் சமமாக நடத்தப்படாமல், வெள்ளையர்களுக்கு ஒரு நீதியும் பூர்வீகக் குடிகளுக்கு ஒரு நீதியும் ஆக இருந்து வருவதையும் இந்த இனவரலாற்று ஆராய்ச்சியில் காண முடிகிறது. பூர்வீக இந்துக்கள் சாந்தமாக இருந்து அனைத்து வகையான முரண்பாடுகளையும் நாசுக்காக கையாண்டதையும், வேற்று மதத்தினர்கள் தங்களின் மதம் சார்ந்த முரண்களை ஆக்ரோ~மாக எதிர்த்துப் பெற்றுள்ளதையும் இந்த இனவரலாற்று ஆய்வில் மானிடவியலாளராகப் புரிந்துகொள்ள முடிகிறது.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.